# சப்பிரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

WEEKLY SCHOOL
வாராந்தப் பாடசாலை

# வலய கல்விப் பணிமனை – எம்பிலிபிடிய

| பாடம் - இந்து நாகரிகம் | தரம் - 13 | வாரம் - 13 |
| --- | --- | --- |

**கவனிக்குக -: எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் ஆலயத்தின் தோற்றம் பற்றி கூறும் நூல் எது?
2. தேசத்துக்கோயில் என்றால் என்ன?
3. சுயம்புலிங்கமாகத் தானே தோன்றி அருள் பாலிக்கும் ஆலயம் எது?
4. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்திற்கு திருப்பணி செய்த இருவர் பெயர் தருக.
5. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்தின் பரிபாலகரை எவ்வாறு அழைப்பர்?
6. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்தில் பூசை செய்பவர்கள் யார்?
7. திருக்கோணேச்சரத்திற்கு திருப்பணிகள் செய்த மன்னன் யார்?
8. திருக்கோணேச்சரத்தின் வரலாற்றினை அறிய உதவும் நூல்கள் எவை?
9. “கொனஸ்ரன்டைன் டிசா” என்ற போரத்துக்கேய தளபதியால் இவ்வாலயம் தரைமட்டம் ஆக்கப்பட்ட ஆண்டு எது?
10. தட்சிணகைலாயம் எனப்போற்றப்படும் ஆலயம் எது?
11. இராவணனின் இஷ்ட தெய்வம் எது?
12. ஆயிரம் தூண்கள் அணி செய்யும் ஆலயம் என போர்த்துக்கேயன் ஒருவனால் புகழப்பட்ட ஆலயம் எது?
13. திருக்கோணேச்சரத்தின் மீதெழுந்த இலக்கியங்கள் இரண்டு தருக
14. நவராத்திரிக்கு முன்னேஸ்வரம் போன்று சிவராத்திரிக்கு சிறப்பு வாய்ந்த தலம் எது?
15. இலங்கையில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் எவை? பாடியோரையும் குறிப்பிடுக.
16. “மன்னாருக்கு சமீபத்திலுள்ள மாதோட்டத்திலே திருக்கேதீஸ்வரம் என்னும் தேன் பொந்து ஒன்று அங்கு மருந்து ஒன்று மறைந்திருக்கின்றது அதனை சென்றடையுங்கள்” என வேண்டுகோள் விடுத்தவர் யார்?
17. எந்த ஆலயத்திலுள்ள இறைவனுக்கு நாகநாதர் என்ற பெயர் வழங்கப்படுகின்றது?
18. கேதீஸ்வரத்தில் காணப்படும் இலிங்கத்தின் பெயர் யாது?
19. “பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின்” என்று எத்தலத்தின் தீர்த்தம் சிறப்பிக்கப்படுகின்றது?
20. அந்நியராட்சியாலும் இயற்கையின் சீற்றத்தாலும் ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகள் தேவாரத்திருவுருவில் மட்டுமே அமைந்துள்ள ஆலயம் எது?
21. சம்பந்தரும், சுந்தரரும் கேதீஸ்வரத்தின் மீது எங்கிருந்து தேவாரம் பாடினார்கள்?
22. பாலாவியில் தீர்த்தமாடி தீர்த்தத்தை குடத்திலே ஏந்தி தலையிற் சுமந்த படி வரிசையாகச் சென்று புராதன மகாலிங்கத்திற்குத்தாமே அபிஷேகம் செய்து பூசிக்கும் ஆலயம் எது?
23. மாதோட்டத்தில் அமைந்துள்ள சிவாலயம் எது?
24. திருவெண்ணெய் நல்லூர் போன்ற சிவதலத்திற்கு ஈடான பெருமை கொண்ட ஆலயம் எது?
25. “கேதீஸ்வர நாதரை கைதொழ கடுவினை அடையாவே” என குறிப்பிட்டவர் யார்?

**Prepared by – M.Anbu (B.A ) R/Emb/Aigburth tmv.Bulutota**